எலியின் கல்யாணம்

ரூத் பெலோவ் கிராஸ்

தமிழில் கிருஷ்ணன்






ஒரு ஊர்ல ஒரு எலிக்கு கல்யாணம் பண்ணிக்க ஆசை வந்துச்சாம். ஆனா சாதாரண பெண் எலியை கல்யாணம் பண்ணுவதற்கு விருப்பமில்லை.

“உலகிலேயே செல்வாக்கும், சக்தியும் படைத்த ஒருவரின் மகளை தான் நான் கல்யாணம் பண்ணிக்குவேன் இல்லனா கல்யாணமே வேண்டாம்.” இப்படி சபதம் எடுத்துக் கொண்டு புறப்பட்டது எலி.


“சூரியனை விட
செல்வாக்கானவர் உலகத்தில்
யார் இருந்திட முடியும்” என்று
நினைத்து கொண்டு முதலில்
சூரியனிடம் சென்றது எலி.




எலி சூரியனிடம் வந்து
“உலகத்தில் உங்களை விட
செல்வாக்கு உடையவர்
யாருமே இல்லை. அதனால்
தான் உங்கள் பெண்ணை
கல்யாணம் பண்ண கேட்க
வந்திருக்கிறேன். அப்படி
உங்கள் பெண்ணை மணம்
முடிக்க முடியாமல்
போனால் நான்
கல்யாணமே பண்ண
போவதில்லை ” என்றது.

“நீ நினைப்பதை போல்
நான் ஒன்னும் உலகிலேயே
செல்வாக்குடையவன்
இல்லை. என்னை விட
சக்தியானவன் அந்த மேகம்
தான்” என்றது எலியிடம்
சூரியன்.








“மேகமா” என்றது எலி
“ஆமாம் மேகம் என் முன் வந்து நின்றால் நான் பூமியின் மீது வெளிச்சம் வீச முடியாது.” என்றது சூரியன்.

“ஆமா.. ஆமா.. அப்படினா நான் மேகத்துக்கிட்ட போறேன், உங்க பெண்ணை நீங்களே வச்சிக்கோங்க” னு சொல்லிட்டு எலி நடையை கட்டியது.




மேகத்தை தேடி எலி பறந்து சென்றது.




எலி மேகத்திடம் வந்து “உலகத்தில் உங்களை விட செல்வாக்கு உடையவர் யாருமே இல்லை. அதனால் தான் உங்கள் பெண்ணை கல்யாணம் பண்ண கேட்க வந்திருக்கிறேன். அப்படி உங்கள் பெண்ணை மணம் முடிக்க முடியாமல் போனால் நான் கல்யாணமே பண்ண போவதில்லை ” என்றது.


”நீ நினைப்பதை போல் நான் ஒன்னும் உலகிலேயே செல்வாக்குடையவன் இல்லை. என்னை விட சக்தியானவன் காற்று தான்” என்றது எலியிடம் மேகம்.




“காற்றா” என்றது எலி
ஆமாம் காத்து தான். ஒரு காத்தடிச்சா
போதும் நான் கலைஞ்சு
போயிடுவேன்.


“ஆமா.. ஆமா.. அப்படினா நான்
காத்துக் கிட்ட போறேன்
உங்க பெண்ணை நீங்களே
வச்சிக்கோங்க” னு சொல்லிட்டு எலி
நடையை கட்டியது.







காற்றைத் தேடி எலி பறந்து சென்றது.






எலி காத்திடம் வந்து “உலகத்தில் உங்களை
விட செல்வாக்கு உடையவர் யாருமே
இல்லை. அதனால் தான் உங்கள்
பெண்ணை கல்யாணம் பண்ண கேட்க
வந்திருக்கிறேன். அப்படி உங்கள்
பெண்ணை மணம் முடிக்க முடியாமல்
போனால் நான் கல்யாணமே பண்ண
போவதில்லை ” என்றது.
“நீ நினைப்பதை போல் நான் ஒன்னும்
உலகிலேயே சக்தியானவன் இல்லை.
என்னை விட சக்தியானவன்
கோபுரம் தான்” என்றது எலியிடம் மேகம்.
“கோபுரமா” என்றது எலி
“ஆமாம் நான் எவ்வளவு காற்றடித்தாலும்
அந்த கோபுரத்தை மட்டும் அசைக்க
முடியவில்லை” என்றது காற்று.

"ஆமா.. ஆமா.. அப்படினா
நான் கோபுரத்துகிட்டே
போறேன்
உங்க பெண்ணை நீங்களே
வச்சிக்கோங்க" னு
சொல்லிட்டு எலி நடையை
கட்டியது.

எலி கோபுரத்திடம் வந்து
"உலகத்தில் செல்வாக்கும்
சக்தியும் உள்ளவர்
யாரென்று கண்டுபிடிக்க
நான் எல்லோரையும் பார்த்து
விட்டேன்
சூரியனிடம் போனேன் !
மேகத்திடம் போனேன் !
காற்றிடம் போனேன் !
இப்போது உங்களிடம்
வந்திருக்கிறேன்"






“நீங்கள் தான் உலகத்திலேயே
செல்வாக்கும் சக்தியும் உடையவரா
 அப்படியானால் நான் உங்கள்
பெண்ணை மணக்க விரும்புகிறேன்”
என்றது கோபுரத்திடம் எலி.

“நான் ஒன்னும் உலகிலேயே
சக்தியானவன் இல்லை. என்னை விட
சக்தியானவன் ஒன்னு இருக்கு. இதோ
பாரு இந்த குட்டி எலி தான்.” என்றது
கோபுரம்

“என்னது குட்டி எலியா” என்றது எலி

“ஆமாம்” என்றது கோபுரம்.



“என் காலுக்கடியில் இருக்கும் இந்த எலியை பாரு அது ஒரு ஓட்டை போட்டு கொண்டிருப்பதை பார்த்தாயா அந்த ஓட்டை ஒரு நாள் பெரிய குழியாகிவிடும் ஒரு நாள் அது என்னை கவிழ்த்தி விடும்.

இப்போ புரிகிறதா இந்த குட்டி எலி என்னை விட சக்தி வாய்ந்தது என்று ஏன் உலகத்திலேயே சக்தி வாய்ந்தது அது தான்” என்றது கோபுரம்.



“உலகத்திலேயே சக்தி வாய்ந்தது ஒரு குட்டி எலி தானா” என்றது எலி

“சரி.. சரி.. அப்பபடின்னா நான் குட்டி எலியிடமே போறேன். எலியின் மகளை கட்டி கொள்வேன்.

உலகத்திலேயே சிறப்பான கல்யாணம் எங்களுடையதாக தான் இருக்கும்” என்றது எலி.





அப்படியே எலியின்
கல்யாணம் நடந்தது.

பல நூற்றாண்டுகளாக இந்த கதை சொல்லப்பட்டிருந்தாலும் இப்போதும் இந்த கதையை கேட்டால் குழந்தைகள் மகிழ்ச்சி அடைகிறார்கள்.

